بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *04/04/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

✪ கைபர் போர் மற்றும் வாதியுல் குறா போர் ஆகியவற்றின் பின்னணியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

✪ காதியான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவுடைய தலைவர் மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் அவர்களின் நற்குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ரமலானுக்கு முன்பு போர்கள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்ட போது பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை சம்பவங்களும் எடுத்துரைக்கப்பட்டன. கைபர் போர் சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டு கொண்டிருந்தன. இன்றும் நான் இது தொடர்பாகவே கொஞ்சம் எடுத்துரைப்பேன். அந்நாட்களில் கைபர் போர் வெற்றியின் மகிழ்ச்சியுடன் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இன்னொரு மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அதைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும்போது, கைபர் வெற்றியால் எனக்கு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டதா அல்லது இந்த விஷயத்தால் ஏற்பட்டதா என்று என்னால் விவரிக்க இயலவில்லை என்றார்கள். அது, அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றவர்களுடன் ஹஸ்ரத் ஜ஼ஃபர் (ரலி) அவர்கள் அபிசீனியாவிலிருந்து திரும்பி வந்த சம்பவம் ஆகும்.

ஹுதைபியா சமாதானத்திற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் நஜாஷி அரசனுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில், இப்பொழுது அங்கு எத்தனை முஸ்லிம் முஹாஜிர்கள் எஞ்சி இருக்கிறார்களோ அவர்களை என்னிடத்தில் மதீனாவுக்கு அனுப்பி வையுங்கள் என்று எழுதி இருந்தார்கள். ஆகவே வேறொரு நாட்டில் 14, 15 வருட காலகட்டத்தை கழித்த பிறகு இம்மக்கள் இரு கப்பல்களில் பயணித்து மதீனா வந்தடைந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கைபரை நோக்கி சென்றிருக்கிறார்கள் என்று அவர்களுக்கு தெரிய வந்தபோது மதீனாவில் தங்கி இருப்பதற்கு பதிலாக அன்னாரை விரைவிலும் விரைவாக சந்திக்கும் துடிப்புடன் நிம்மதியற்ற நிலையில் கைபரை நோக்கி புறப்பட்டு சென்றார்கள். இம்மக்களுடன் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களும் தம் சமுதாயத்தின் ஐம்பதையும் விட அதிக நபர்களுடன் மதீனா வந்தடைந்திருந்தார்கள். இவர்களுடன் தவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்த சில மக்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி), துஃபைல் பின் அம்ர் (ரலி) மற்றும் அவர்களுடைய தோழர்களும் இருந்தார்கள். அஷ்ஜஃ கோத்திரத்தைச் சார்ந்த சில மக்களும் வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்திருந்த இந்த அனைத்து மக்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்கள் கைபர் போர்ச் செல்வத்திலிருந்து கொஞ்சமாவது கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் ஜ'ஃபர் (ரலி) மற்றும் அவர்களுடன் வந்திருந்த மற்ற முஸ்லிம்கள் கப்பலில் பயணம் செய்து வந்தடைந்திருந்தார்கள். ஆகவே அவர்கள் 'அஸ்ஹாபே ஸஃபீனா' (கப்பல்காரர்கள்) என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் மதீனா வந்தடைந்த போது 15 ஆண்டு காலம் கடந்திருந்தது. இங்கிருந்த முஹாஜிர் முஸ்லிம்களோ பல போர்களில் கலந்து கொண்டிருந்தார்கள். (மதீனாவுக்கு) ஹிஜ்ரத் செய்வதிலும் முந்தி இருந்தார்கள். ஆகவே, தாம் அவர்களை விட மேன்மையானவர்கள் என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டதாக தெரிய வருகிறது.

ஒரு முறை ஹஸ்ரத் ஜ'ஃபர் (ரலி) அவர்களின் மனைவி ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். அங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். இந்த பெண்மணி யார் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அவர்களைப் பற்றி அறிந்து கொண்ட பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் அவர்களிடம், நாங்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதில் உங்களை முந்திக் கொண்டவர்களாக உள்ளோம். ஆகவே உங்களைக் காட்டிலும் நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அதிக நெருக்கமுடையவர்களாவோம் என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களுக்கு வருத்தமும் கோபமும் ஏற்றப்பட்டது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்வாறு ஒருபோதும் கிடையாது. உங்களைப் போன்ற மக்களோ பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்தீர்கள். உங்களில் பசித்தோருக்கு அன்னார் உணவளித்தார்கள். உங்களில் குறைமதியுடையோருக்கு அன்னார் அறிவுரை வழங்கி வந்தார்கள். ஆனால் நாங்களோ எங்கள் நாட்டை விட்டு தொலைதூரத்தில் வேறோர் எதிரி நாட்டில் இருந்தோம். அங்கு எங்களுக்கு பலவிதமான அச்சமும் பயமும் ஏற்பட்டு வந்தன. நாங்கள் அந்த அனைத்து துன்பங்களையும் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுக்காக பொறுத்துக் கொண்டோம். இறைவன் மீது ஆணையாக! பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் இதைக் குறித்து கேட்காதவரை நான் உணவு உண்ண மாட்டேன் என்று ஹஸ்ரத் அஸ்மா (ரலி) கூறினார்கள். பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி இந்த அனைத்து விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், அவருக்கு உங்களைவிட அதிக உரிமை கிடையாது. மாறாக, அவருக்கும் அவருடைய தோழர்களுக்கும் ஒரு ஹிஜ்ரத் என்றால் உங்களுக்கு அதாவது அபிசீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்த, கப்பலில் பயணம் செய்த உங்களுக்கு இரண்டு ஹிஜ்ரத்துகள் ஆகும் என்று கூறினார்கள்.

**யஸார் எனும் பெயருடைய அபிசீனிய அடிமை ஒருவர் முஸ்லிமானார். பிறகு அவர் ஷஹாதத்தையும் அடைந்தார். அதைப் பற்றிய குறிப்பும் இங்கு காணக் கிடைக்கிறது.** அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; அந்த அபிசீனிய அடிமை கைபர் வாசி ஒருவருடைய ஆடுகளை மேய்த்து வந்தார். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக கைபர் வாசிகள் ஆயுதம் ஏந்தியதை கண்டபோது அவர் கைபர் வாசிகளிடம், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள், தம்மைத் தாமே நபி என்று கூறிக் கொண்டிருக்கும் ஒருவருடன் நாங்கள் போர் செய்ய போகிறோம் என்றார்கள். அதைக் கேட்ட போது அவருடைய உள்ளத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் நினைவு குடிகொண்டு விட்டது. அதாவது, நபி என்று வாதிக்கிறார் என்றால் நிச்சயமாக அவரிடம் ஏதேனும் ஒரு விஷயம் இருக்கும் என்று புரிந்து கொண்டார். அவர் தன் ஆடுகளை மேய்ப்பதற்காக ஓட்டி வந்தபோது முஸ்லிம்கள் அவரை பிடித்து அன்னாரிடம் கொண்டு வந்தனர்.

இன்னோர் அறிவிப்பில் இச்சம்பவம் இவ்வாறு விளக்கமாக கூறப்பட்டுள்ளது. அது என்னவென்றால், அந்த அடிமையே ஆடுகளை மேய்த்தவாறு பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார். அன்னார் அவரிடம் பேசினார்கள். நான் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டால் எனக்கு என்ன கிடைக்கும் என்று அந்த அடிமை கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டால் உமக்கு சொர்க்கம் கிடைக்கும் என்றார்கள். ஆகவே, அந்த அடிமை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அம்மக்களுடன் போர் செய்து கொல்லப்பட்டால் நான் சொர்க்கத்திற்குள் நுழைவேனா என்று கேட்டார். ஆம்! சொர்க்கத்தில் நுழைந்து விடுவீர் என்று அன்னார் கூறினார்கள். அந்த அபிசீனிய அடிமை கூறினார்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த ஆடுகள் என்னிடத்தில் அமானிதமாக உள்ளன. இவற்றை நான் என்ன செய்வது? பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவற்றை படையை விட்டு வெளியே கொண்டு சென்று திறந்த வெளியில் விட்டு விடுவீராக. நிச்சயமாக அல்லாஹ் உமது அமானிதத்தை உம் சார்பாக செலுத்தி விடுவான். அதாவது, இந்த ஆடுகளை அம்மக்கள் வரை கொண்டு சேர்த்து விடுவான் என்றார்கள். பிறகு அவ்வாறே நிகழ்ந்தது.

**ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் போர்ச்செல்வங்களை கைப்பற்றுவதற்காக போர் புரிந்தார்கள் என்று அன்னார் மீது ஆட்சேபனை செய்யப்படுகின்றது. குறிப்பாக கைபர் போர் தொடர்பாக இந்த ஆட்சேபனை எழுப்பப்படும்போது, யூதர்களின் செல்வங்களை தகாத முறையில் கைப்பற்றுவதற்காக இந்த அநீதி இழைக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. இந்த விஷயம் சரியானதல்ல! போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எதிரியின் ஆட்டு மந்தை ஒன்று முஸ்லிம்களின் கையில் கிடைக்கிறது. அப்பொழுது ஸஹாபிகளின் நிலையோ எப்படிப்பட்டதாக இருந்தது என்றால் பசியால் அவர்கள் களைப்படைந்து போயிருந்தார்கள். சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்கவில்லை. இந்த ஆடுகளோ இலவசமாக கிடைத்த போர்ச் செல்வமாக இருந்தது. அவற்றை பயன்படுத்தி இருக்கலாம். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களோ போரிலும் கூட அமானிதத்தின் உரிமையை செலுத்தியவாறு ஆடுகளை திரும்ப ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார்கள்.**

பிறகு, அந்த அடிமை போரில் கலந்து கொண்டார். எந்த அளவுக்கென்றால், அவர் ஷஹீது ஆகிவிட்டார். அவர் ஒரு ஸஜ்தா கூட செய்திருக்கவில்லை! அப்போதுதான் புதிதாக முஸ்லிமாக ஆகி இருந்தார். எந்த ஒரு தொழுகையும் தொழுதிருக்கவில்லை.

**கைபர் போரில் சில மார்க்கச் சட்ட விவகாரங்கள் தொடர்பான சம்பவங்களும் காணக் கிடைக்கிறன.** ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: கைபர் போரின்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், நாட்டுக் கழுதையின் இறைச்சியையும், 'முத்அத்துன்னிஸா' (கால வரம்பிட்டுச் செய்யப்படும் திருமணம்) ஆகியவற்றையும் தடை செய்தார்கள்.

ஃபதக் எனுமிடத்தைச் சார்ந்த மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் சமரசம் செய்து கொண்ட குறிப்பும் காணக் கிடைக்கிறது.

கைபருடைய போர்ச் செல்வம் குறித்தும் அது பங்கிட்டு கொடுக்கப்பட்டது குறித்தும் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள், கைபரிலிருந்து கிடைத்த பொருட்களை 36 பங்குகளாக பிரித்தார்கள். அதில் பாதியை அதாவது 18 பங்குகளை (வருங்காலத்து தேவைகளைக் கருத்தில் கொண்டு) முஸ்லிம்களுக்காக ஒதுக்கி

வைத்தார்கள். அவற்றுள் ஒவ்வொரு பங்கையும் நூறு பங்காக பிரித்தார்கள். அதாவது 1800 பங்காக அவை பிரிக்கப்பட்டன. அதில் இருந்த மற்ற பங்குகளை போன்றே பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் ஒரு பங்கு இருந்தது. அதாவது மற்ற மக்களுக்கு இருந்த பங்கைப் போன்றே அன்னாருக்கும் இருந்தது. மொத்த பங்கின் பாதியை வருங்கால தேவைகளுக்காகவும், விவகாரங்களுக்காகவும், முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டிய விஷயங்களுக்காகவும் ஒதுக்கி வைத்திருந்தார்கள். அது ரிசர்வ் ஃபண்டில் சேர்ந்திருந்தது.

**கைபர் கோட்டைகளில் இருந்து போர்ச் செல்வங்கள் ஒன்று திரட்டப்பட்டபோது அதில் தவ்ராத்தின் சில பக்கங்களும் இருந்தன. அவற்றை திரும்ப தரும்படி யூதர்கள் வேண்டியபோது, அந்த பக்கங்களை பத்திரமாக திரும்ப ஒப்படைக்கும்படி பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.**

**பெருமானார் (ஸல்) அவர்கள் மார்க்க சுதந்திரத்தையும், மார்க்க உணர்வுகளையும் எந்த அளவு பாதுகாத்தார்கள் என்றால் யூதர்களின் தவ்ராத்தை பத்திரமாக திரும்ப ஒப்படைக்கும்படி கட்டளையிட்டார்கள். இன்றைய காலத்தில் நடப்பது போன்று முஸ்லிம்களுடனான பகையின் காரணமாக திருக்குர்ஆனை எரிக்கச் செய்வது போன்று செய்யுமாறு கட்டளையிடவில்லை.**

**கைபரிலிருந்து திரும்பிச் செல்லும் போது வாதியுல் குறா எனுமிடத்தில் நிகழ்ந்த போரைப் பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது.** பெருமானார் (ஸல்) அவர்கள் கைபரை வெற்றி கொண்ட பிறகு சில நாட்கள் அங்கு தங்கி இருந்தார்கள். பிறகு, அன்னார் இஸ்லாமிய படையை அழைத்துக் கொண்டு திரும்ப புறப்பட்டார்கள். அப்போது வாதியுல் குறாவில் இருந்த யூதர்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அவர்கள் அறிவிக்கிறார்கள்: வாதியுல் குறாவில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் மித்அம் எனும் ஓர் அடிமையும் இருந்தான். அவன் பெருமானார் (ஸல்) அவர்களின் சவாரியின் சேணத்தை இறக்கி கொண்டிருந்தபோது எங்கிருந்தோ வந்த அடையாளம் தெரியாத ஓர் அம்பு அவன் மீது குத்தியது. அவன் இறந்து போனான். அவனுக்கு ஷஹாதத் வாழ்த்துக்கள் என்று மக்கள் கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவ்வாறு கிடையாது! என் உயிர் எந்த இறைவன் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! கைபர் நாள் அன்று போர்ச் செல்வத்திலிருந்து இவன் எடுத்துக்கொண்ட போர்வை இவன் மீது நெருப்பாக கொளுந்து விட்டு எரிகிறது. அந்த போர்வை அவனுக்காக பங்கிட்டு கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்று கூறினார்கள்.

அதாவது போர்ச் செல்வம் ஒன்று திரட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது அதிலிருந்து இவன் அந்த போர்வையை திருடிக் கொண்டான் என்று கூறினார்கள்.

அன்னார் இவ்வாறு கூறுவதைக் கேட்ட ஒருவர், இது பெரும் ஆபத்தான விஷயமாயிற்றே! போர்வையை திருடியதன் காரணமாக இவன் நரகத்திற்கு செல்கிறானே என்று கூறியவாறு அவர் எடுத்து வைத்திருந்த ஒரு கயிறையோ அல்லது இரண்டு கயிறையோ அன்னாரிடம் கொண்டு வந்து, பங்கிட்டு கொடுப்பதற்கு முன்பே நான் இதை எடுத்து வைத்திருந்தேன் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஒரு கயிறாக இருந்தாலும் சரி! இரண்டு கயிறாக இருந்தாலும் சரி! அது நெருப்பின் பக்கம் அழைத்துச் செல்வதற்கு காரணமாக ஆகிவிடும் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் வாதியுல் குறாவில் 4 நாட்கள் வரை தங்கி இருந்தார்கள். பிறகு மதீனாவுக்கு புறப்பட்டுச் சென்றார்கள்.

இதன் மற்ற விவரங்கள் இன்ஷா அல்லாஹ் இனி வரக்கூடிய காலத்தில் எடுத்துக் கூறப்படும். இப்போது நான் சில மர்ஹூம்களின் குறிப்பை எடுத்துக் கூறுவேன். தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன்.

**முதல் குறிப்பு மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் அவர்களுடையதாகும். இவர்கள், காதியான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவுடைய தலைவராக இருந்தார்கள்.** கடந்த நாட்களில் - ரமலானுடைய நாட்களில் 87 வயதில் மரணமடைந்துள்ளார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் அவர்கள் வஸிய்யத்தும் செய்திருந்தார்கள். இவர்களின் தந்தை பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார்கள். (தெலுங்கானா மாநிலம்) சிந்தகுண்டாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சேட் முஹம்மது முஅய்னுத்தீன் சாஹிப் அவர்கள் மர்ஹூம் அவர்களை கல்வி கற்பதற்காக காதியானுக்கு அனுப்பி வைத்தார்கள். 1957 இல் மதரஸா அஹ்மதிய்யாவில் தேர்ச்சி பெற்ற பிறகு 1960 இல் பஞ்சாப் யூனிவர்சிட்டி சண்டிகரில் மவ்லவி ஃபாஸிலுடைய பரீட்சையில் தேர்ச்சி பெற்றார்கள். அதற்குப் பிறகு ரப்வா ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஷாஹித் டிகிரி பெற்றார்கள். இவ்வாறு, ஷாஹித் டிகிரி பெறக்கூடிய முதல் இந்திய முரப்பியாக இருந்தார்கள்.

காதியானில் பல்வேறு தொண்டுகளுக்கான நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. அந்த காலகட்டத்தில் இவர்கள் ஆலிம் என்ற வகையில் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவுடைய உறுப்பினராக நியமிக்கப்பட்டார்கள். அடிஷனல் நாஸிம் இர்ஷாத் வக்ஃபே ஜதீது பேரூன் ஆகவும், சத்ர் உமூமியாகவும், சத்ர் மஜ்லிஸ் வக்ஃபே ஜதீதாகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. இரண்டு முறை ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பிரின்சிபல் ஆகவும் இருந்துள்ளார்கள். சத்ர் கஸா போர்ட் ஆகவும், சத்ர் மஜ்லிஸ் கார்பர்தாஸ் ஆகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. பிறகு 2021 -ல் நான் இவர்களை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவுடைய தலைவராக நியமித்தேன். மரணம் வரையிலும் அந்த பொறுப்பில்தான் இருந்தார்கள்.

நாஸிர் சாஹிப் அஃலா காதியான் கூறுகிறார்கள்: ‘மர்ஹூம் அவர்கள் மிகவும் எளிய இயல்பைக் கொண்டவரும், மிகவும் மன நிறைவுடன் வாழ்வைக் கழித்தவரும் ஆவார்கள்.’

இது உண்மையும் ஆகும்! நானும் இதை கண்டுள்ளேன்.

‘மர்ஹூம் அவர்களுக்கு ஜமாஅத் சார்பாக கிடைத்து வந்த வருமானத்தில் நிறைவாக வாழ்ந்தார்கள். கடன் வாங்கி செலவு செய்வதை மிகவும் வெறுத்து வந்தார்கள். மிகவும் அழகாக எழுதக்கூடிய உயர்தரமான எழுத்தராகவும் திகழ்ந்தார்கள். கம்ப்யூட்டரில் கம்போசிங் பணிகள் ஆரம்பித்திருக்காத காலகட்டத்தில் பத்ர் பத்திரிக்கை மற்றும் ஜமாஅத்தின் நூல்கள், இதழ்கள் ஆகியவற்றை எழுதக்கூடிய நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்து வந்தது. சிறந்த சொற்பொழிவாளராகவும், சிறந்த கட்டுரைகளை எழுதக்கூடியவராகவும் இருந்தார்கள். காதியான் மாநாடு மற்றும் இதர ஜமாஅத் நிகழ்ச்சிகளிலும், கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்து வந்தது. காதியானில் இருந்து MTA வில் நேரடியாக ஒளிபரப்பாகக் கூடிய ‘ராஹே ஹுதா’ நிகழ்ச்சியிலும் நீண்ட காலமாக கேள்விகளுக்கு பதில் அளிக்கும் நல்வாய்ப்பை பெற்று வந்தார்கள்.

சிறுநீரக நோய் இருந்தது. பலவீனமும் ஆகி இருந்தார்கள். ஆனால் அவ்வாறிருந்தும் மிக தைரியத்துடன் தம் கடமைகளை நிறைவேற்றி வந்தார்கள். இவர்களின் முன்மாதிரி உண்மையிலேயே பின்பற்றத் தகுந்ததாக இருந்தது. நோயுற்று

இருந்த போதிலும் பலவீனமான உடல்நிலை இருந்த போதிலும் மிக துணிவுடன் அவர்கள் கடந்த வருடம் காதியானுடைய 2024 ஆம் ஆண்டு மாநாட்டை தலைமை வகித்து ஆரம்பித்து வைத்தார்கள். அதேபோன்று கடந்த மஜ்லிஸே ஷூராவுக்கும் தலைமை வகித்தார்கள்.

அல்லாஹ் இவர்களுக்கு 62 ஆண்டுகள் எனும் நீண்ட காலம் ஜமாஅத்திற்கு தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பை வழங்கினான். இறுதி நாட்களில் வீட்டார்களிடம், எனது பிறப்பு ரமலான் மாதத்தில் இருந்தது; எனது மரணமும் ரமலானில்தான் இருக்கும் என்று கூறி வந்தார்கள். அவ்வாறே, அருளுக்குரிய ரமலான் மாதத்தின் 27 வது நாளில் அவர்கள் மரணமடைந்தார்கள்.

மிகவும் உழைக்கக்கூடிய மனிதராகவும், பணிவுள்ள மனிதராகவும் திகழ்ந்தார்கள். தம் வேலையை தாமே செய்ய வேண்டும்; பிறருக்கு சுமையாக இருக்கக் கூடாது என்றே எப்பொழுதும் முயற்சி செய்து வந்தார்கள். எந்த அளவுக்கென்றால், தம் தனிப்பட்ட வேலைகளையும் தாமே செய்து வந்தார்கள். தம் கூற்றுக்கிணங்க செயல்படும் ஆலிமாக இருந்தார்கள். தாம் செய்த அர்ப்பணித்தலுக்கான உறுதிமொழியை நிறைவேற்றினார்கள்; அதற்கான உரிமையை வழங்கினார்கள். அல்லாஹ் இவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

இவர்களது முதல் திருமணம் இக்பால் பேகம் சாஹிபா உடன் நிகழ்ந்தது. அவர்கள் மூலமாக இரு மகன்களும் இரு மகள்களும் உள்ளார்கள். அவர்கள் மரணமடைந்த பிறகு இரண்டாவது திருமணம் செய்தார்கள். மர்ஹூமுடைய மகன்கள், மகள்கள், மருமகன்கள் ஆகிய அனைவருக்கும் மார்க்கத் தொண்டுக்கான நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் இவர்களின் சந்ததிகளிடத்திலும் இவர்களின் மார்க்கத் தொண்டின் உணர்வை நிலைபெறச் செய்வானாக.

*இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள், கனடாவின் கஸா போர்ட் ஆக இருந்த அப்துர் ரஷீத் யஹ்யா சாஹிப், சிந்த் -ல் ஹைதராபாத் மாவட்ட அமீராக இருந்த மிர்ஸா இம்தியாஸ் அஹ்மது சாஹிப், அல்ஜீரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய அல்ஹாஜ் முஹம்மது பின் அரபி சாஹிப், ஹைதராபாத் மாவட்டத்தில் கோட்ரியைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் அஷ்ரஃப் சாஹிப் ஆகியோருடைய நற்குறிப்பை எடுத்துரைத்து மர்ஹூம்களின் அந்தஸ்து உயர்வு மற்றும் பாவமன்னிப்பிற்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ
وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ
ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)